Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 27, 2021

திங்கட்கிழமை டிசெம்பர் 27, 2021 | ஒளி: 07 கதிர் 189 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## உணவு தட்டுப்பாடு அபாயம்



உணவுப் பொருட்களின் விலை உயர்வினால் அடுத்த வருடம் ஆரம்பத்திலேயே உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை சார்ந்த நிபுணர்களே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

வேலைத்திட்டத்தை அமுல்படுத்தாவிடின்

# தேசத்தின் வீழ்ச்சியை தடுக்க முடியாது



**அரசாங்கத்துக்கு நிபுணர்களின் ஆலோசனை தேவையில்லை வேலைத்திட்டமே முக்கியம்**

**கிராமங்களில் மக்கள் ஒரு வேளை உணவைக் கூட உண்ண முடியாத நிலையில் உள்ளனர்**

கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான மக்கள் குறைந்த பட்சம் ஒரு வேளை உணவையாவது சாப்பிட முடியுமா என்ற கவலையில் இன்று உள்ளனர் எனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, தேசத்தின் வீழ்ச்சியை அரசாங்கத்தால் தடுக்க முடியாது என்றார்.

தொடர்ச்சி P2

## மிளகாய், கத்திரிச் செடிகளையும் நிவித்தி கீரையையும் பயிரிடவும்

**மக்களுக்கு அறிவுறுத்தினார் அமைச்சர் பந்துல**



ஜனவரி மாதம் முதல் தங்களுடைய வீட்டுத் தோட்டங்களில் ஏதாவது மரக்கறிகளை பயிரிடவேண்டும் எனத் தெரிவித்த வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, நாட்டில் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமெனத் தெரிவித்த அவர், மிளகாய், கத்திரிச்செடி மற்றும் நிவித்தி ஆகியவற்றை உடனடியாக வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2



வெற்றுக்காணியில் வைத்தியசாலை கழிவு:

## சுகாதார தரப்பினர் அதிரடி நடவடிக்கை

■ எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்னாள் உள்ள வெற்றுக்காணியில், தனியார் வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் தீயிட்டு எரிக்கப்படுவதால், சுற்றுச் சூழலுக்கு பெரும் ஆபத்து நிகழ்வதாக, அக்கிராம மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## சுனாமி நினைவு நாள்...

சுனாமி ஆழிப்பேரலைக்குப் பலியானவர்களின் 17ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்றாகும். (26) அதனையொட்டி நாடுமுழுவதிலும் உள்ள அவர்களது உறவினர்கள், பொதுமக்கள் உணர்வுபூர்வமாக, கண்ணீர் மல்க நினைவுகூர்ந்தனர்.



## பஸ் கட்டணங்கள் புதன்முதல் அதிகரிப்பு

எதிர்வரும் புதன்கிழமை (29) முதல் பஸ் கட்டணத்தை சிறிதளவு அதிகரிக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

திருத்தங்களுக்கு உட்பட்ட வகையில் இந்த பஸ் கட்டணங்கள் அமையுமென அவர் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## பதிவுத் திருமணங்களில் பாரிய திருத்தங்கள்

வெளிநாட்டவர்களை பதிவு திருமணம் செய்துகொள்ளும் இலங்கையர்கள், பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து “பாதுகாப்பு தடைநீக்கல் அறிக்கை” பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

எரிபொருள் பிரச்சினைக்கு;

## மங்களவின் சூத்திரமே தீர்வு

**வலியுறுத்துகிறது சுதந்திரக் கட்சி**



நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முன்னாள் நிதி அமைச்சரான அமரர் மங்கள சமரவீர, அறிமுகம் செய்திருந்த எரிபொருள் விலை சூத்திரமே, எரிபொருள் பிரச்சினைக்கு சிறந்த தீர்வாகும் என தெரிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி,

தொடர்ச்சி P2

## இறக்குமதியை இன்னுமின்னும் கடுமையாக கட்டுப்படுத்தவும்

இறக்குமதியின் வரையறையை இன்னுமின்னும் அதிகரிக்கவேண்டுமென இலங்கை மத்திய வங்கியினால், நிதியமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2



இந்திய படகுகளில் ஒன்றை

## இரணைக்கு வழங்க முடிவு

■ செந்தூரன் பிரதீபன்

கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை இரணைதீவு பகுதி மீனவர்களுக்கு ஒரு படகை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நாட்டில் நடந்துகொண்டிருப்பது

## ‘உழவு யுத்தமல்ல; பஞ்ச யுத்தமாகும்’



அரசாங்கம் இன்று “உழவு யுத்தம்” பற்றி பேசினாலும் நாட்டில் “பஞ்ச யுத்தம்” நிலவுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பிள்ளையாருக்கு மேல் புத்தர் சிலை

**மக்கள் எதிர்ப்பு: சிலையும் அகற்றப்பட்டது**

■ பைஷல் இஸ்மாயில், மட்டு. துஷாரா

திருகோணமலை - மூதூர், 64ஆம் கட்டை மலையடி பிள்ளையார் கோவிலில் உள்ள பிள்ளையார் சிலைக்கு மேல், புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் பதற்றநிலை தோன்றியது.

தொடர்ச்சி P2

## சிலரிடமிருந்து அமைச்சுக்களை பறிக்குமாறு ‘மொட்டு’ ஆலோசனை

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகளை வகிக்கும் சில அமைச்சர்களிடமிருந்து அமைச்சுப் பதவிகளை பறிப்பதற்கு அரசாங்கத்துக்குள் ஆலோசனை செய்யப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அதன்பின்னரே, அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமெனவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள சில அமைச்சர்களிடமிருந்து அமைச்சுப் பதவிகளை பறிக்குமாறு, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்களே கட்சியின் மேலிடத்துக்கு யோசனையை முன்வைத்துள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2



## அடுப்பு வெடித்து சிதறியதில் வீடு முற்றாக எரிந்து நாசம்

**தாயின் செயலால் உயிர்ச்சேதம் தவிர்ப்பு**

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி, குரக்கான்சேனையில் சமையல் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியதில், வீடும் வீட்டுடன் இருந்த சிறிய வர்த்தக நிலையமும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மூன்று பிள்ளைகளுடன் தனிமையில் வாழ்ந்து வரும் தாய், நேற்று (26) அதிகாலையில் தனது பேரப்பிள்ளைக்கு தேநீர் தயாரிப்பதற்காக, தண்ணீரை கொதிக்க வைக்க காஸ் அடுப்பைப் பற்ற வைத்துள்ளார்.

இதன்போது, காஸ் அடுப்பு திடீரென பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. சிறிது நேரத்தில், வீடும் தீப்பற்றிவிட்டது.

அதனை கண்டுக்கொண்ட அந்த தாய், வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த தனது மூன்று பிள்ளைகள்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தேசத்தின் வீழ்ச்சியை தடுக்க முடியாது



நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) காலியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி குறித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தனர். தற்போது ஏமாற்றமடைந்துள்ள மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

மேலும், கிராமப்புறங்களில் உள்ள மக்கள் ஒரு வேளை உணவைக் கூட வாங்க முடியாத சூழலில் அரசாங்கம் மக்களை இரண்டு வேளை உணவை உண்பதை ஊக்குவித்துள்ளதாகவும், சில அமைச்சர்கள் தமது சொந்த உணவை வீட்டிலேயே பயிரிடுமாறு மக்களை ஊக்குவிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் வீரக்கொடி மேலும் தெரிவித்தார்.

உர நெருக்கடியால் உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதைக் காண அரசாங்கத்துக்கு நிபுணர்களின் ஆலோசனை தேவையில்லையென சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர், நடைமுறை வேலைத்திட்டத்தை விரைவில் அமுல்படுத்தாவிடின் தேசத்தின் வீழ்ச்சியை அரசாங்கத்தால் தடுக்க முடியாது என்றார்.

## உணவு தட்டுப்பாடு அபாயம்

தற்போதைய நிலைமைக்கு உடனடி தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் அரிசி ஒரு கிலோகிராம் 200 ரூபாயாக உயரலாமென நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பால் மா, எரிவாயு, மண்ணெண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு, நாடளாவிய ரீதியிலுள்ள சந்தைகளில் தொடர்ந்தும் கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

உணவு பொருட்களுக்கான தட்டுப்பாட்டிற்கு மேலதிகமாக அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன.

அதிகரித்து வரும் பொருட்களின் விலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு நாட்டில் உற்பத்தியை விரிவுபடுத்துவதே ஒரே தீர்வாகுமென நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பெரும்போக பருவ பயிர்ச்செய்கை நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென அமைச்சர் பந்துல குணவர்தன அறிவுறுத்தியிருந்தார். இந்நிலையிலேயெ விவசாய நிபுணர்களும் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளனர்.

## இரணைக்கு வழங்க முடிவு

மயிலிட்டி துறைமுகத்துக்கு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நேற்று முன்தினம் (25) மாலை,திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்ட அமைச்சர், எதிர்காலத்தில் மயிலிட்டி துறைமுகத்தில் இரண்டாம் கட்ட பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில் மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள் என்றும் அவர் அறிந்துகொண்டார்.

அத்துடன், கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை இரணைதீவு பகுதி மீனவர்களுக்கு ஒரு படகினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அந்தப் படகுகள் தற்பொழுது மயிலிட்டித்துறை முகத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த படகுகள் அரச உடமை ஆக்கப்பட்டுள்ளன. இந்தியாவில், அழுத்தங்கள் தெரிவித்தாலும் நாங்கள் இந்திய மீன்பிடி படகுகளை விடுவிக்கமாட்டோம் எனவும், அமைச்சர் கூறினார்.

## இறக்குமதியை இன்னுமின்னும் கடுமையாகக் கட்டுப்படுத்தவும்

அந்நிய செலாவணி கையிருப்பு குறைவதை தடுப்பதற்காக இவ்வாறான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்றும் மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது. ஆகக் கூடுதலாக வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்து கொள்வதற்கும், ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்து கொள்வதற்கும், வெளிநாடுகளில் இருந்து வரும் வெளிநாட்டு அந்நிய செலாவணியை குறைத்துக்கொள்ளல் உள்ளிட்ட இன்னும் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவையில் கலந்துரையாடியதன் பின்னர், இதுதொடர்பில் தீர்மானம் எடுக்கவேண்டும் என்றும் மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது.

அத்தியாவசியம் இல்லாத பொருட்களௌன பல பொருட்கள் பெயரிடப்பட்டு, அவ்வாறான பொருட்கள் இறக்குமதிச் செய்வதை கைவிடுவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது.

அதனால், அத்தியாவசியப் பொருட்களே தற்போது மீதமிருக்கிறது என்றும், அத்தியாவசியப் பொருட்களும் வரையறுக்கப்பட்டுள்ளது.

## சுகாதார தரப்பினர் அதிரடி நடவடிக்கை

பரமேஸ்வரா சந்தியில் உள்ள தனியார் வைத்தியசாலையின் நீண்ட கால மருத்துவக் கழிவுகளே இப்பகுதியில் தீயிட்டு கொளுத்தப்படுவதாக, மக்கள் செய்த முறைப்பாட்டின் பேரில் மாநகர சபை உறுப்பினர்கள் அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு சுகாதாரத் துறையினரின் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

சம்பவ இடத்துக்கு நேரில் வருகை தந்த சுகாதாரத் துறையினர், அது தொடர்பான ஆதாரங்களைத் திரட்டியதோடு, இது தொடர்பில் உடன் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, குறித்த வைத்தியசாலைக்கு ஏற்கெனவே பல தடவை அறிவுறுத்தப்பட்டுள்ள போதும், மீண்டும் இவ்வாறான ஒரு செயல் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் உடனடியாக சுற்றுச் சூழலுக்கு பொறுப்பான பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பஸ் கட்டணங்கள் புதன்முதல் அதிகரிப்பு

பஸ் கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ளாவிடின் நாடளாவிய ரீதியில் பணிநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ‘உழவு யுத்தமல்ல; பஞ்ச யுத்தமாகும்’

ஹம்பாந்தோட்டையில் நேற்று (26) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தன்னிச்சையாக எடுக்கப்பட்ட தீர்மானங்களால் நாட்டின் விவசாயத்தை அரசாங்கம் அழித்தது. ஒவ்வொரு வீடுகளிலும் சமையல் எரிவாயு அடுப்புகள் வெடிக்கும் நாடாக மாற்றியுள்ளது என்றார்.

அத்துடன், நாட்டின் இன்றைய நிலையில் நிவாரணப் பொதிகளை வழங்குவதாக சில அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பெருமை அடித்தாலும் மனஅழுத்தம், பணவீக்கம், துக்கம், துயரம், கண்ணீர் ஆகிய பொதிகளே மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றார்.

17 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் இந்த நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை அழித்து விட்டதாக தெரிவித்த அவர், தற்போதைய அரசாங்கம் இயற்கை அனர்த்தத்திற்கு பதிலாக உருவாக்கியுள்ள பேரழிவால் நாடு அழிவு பாதையை நோக்கி சென்றுள்ளதாகத் தெரிவித்தார்.

## மிளகாய், கத்திரிச் செடிகளையும் நிவித்தி கீரையையும் பயிரிடவும்

இரண்டாம் உலக யுத்தத்தின் போதும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் பந்துல குணவர்ன, அதற்கு முகங்கொடுப்பதற்கு இப்போது இருந்தே தயாராக வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு வீட்டுத் தோட்டங்களில் மிளக்காய் செடிகள் சில, கத்தரிச்செடிகள், நிவித்தி உள்ளிட்ட கீரை வகைகளை உற்பத்தி செய்யவேண்டும். அத்துடன், குறுகிய காலத்தில் பயன்படுத்தக்கூடிய செடிவகைகளை நட்டுக்கொள்ளவேண்டும். அவை தொடர்பில் அறிவுறுத்தியுள்ளோம் என்றும் அமைச்சர் பந்துல தெரிவித்துள்ளார்.

## பதிவுத் திருமணங்களில் பாரிய திருத்தங்கள்

வெளிநாட்டவர்களை திருமணம் செய்துகொள்ளப்போகும் இலங்கையர்களின் திருமணம் மேலதிக மாவட்டப் பதிவாளர் ஊடாக மாத்திரமே பதிவு செய்துகொள்ள முடியும் என பதிவாளர் நாயகம் வெளியிட்டுள்ள சுற்றுநிரூபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நபர்களைப் பதிவு திருமணம் செய்துகொள்வதால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை தடுப்பதற்காகவும், மேலும் சமூக சிக்கல்களை குறைப்பதற்காகவுமே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பதிவாளர் நாயகம் வெளியிட்டுள்ள சுற்றுநிரூபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையர்களை திருமணம் செய்துகொள்ள விரும்பும் வெளிநாட்டவர்கள் அந்தந்த நாடுகளின் பாதுகாப்புப் பிரிவிடமிருந்து குற்றவாளி அல்ல என்பதற்கான சான்றிதழின் மூலப் பிரதியை, அவரின் சுகாதார நிலைமைகள் தொடர்பான அறிக்கை என்பனவும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மங்களவின் சூத்திரமே தீர்வு

எனவே மங்களவின் எரிபொருள் விலை சூத்திரத்தை அரசாங்கம் மீள அமுல்படுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் உறுப்பினரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர, இந்த சூத்திரமே சிறந்த தீர்வாகுமென நான் கூறுவேன். அச்சூத்திரத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தினால் எரிபொருள் பிரச்சினைகள் ஏற்படாது என்றார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கும்போது உள்நாட்டிலும் விலை அதிகரிக்கிறது. எனினும்? உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைவடைந்தாலும் உள்நாட்டில் குறைவடைவதில்லை எனவும் தெரிவித்தார்.

எனவே, உலக சந்தைக்கு ஏற்ப எரிபொருளின் விலையை உள்நாட்டில் தீர்மானிக்கக்கூடிய முறையொன்று நாட்டுக்கு அவசியம். எதிர்காலத்திலாவது இதனை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட நல்ல விடயங்களையும் நல்லதல்ல எனக்கூறி தள்ளிவைக்காது, நல்ல விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார் .

## சிலரிடமிருந்து அமைச்சுக்களை பறிக்குமாறு ‘மொட்டு’ ஆலோசனை

சிறு கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலர், அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்துவருகின்றனர். அவ்வாறானவர்களை வைத்துக்கொண்டு அரசாங்கத்தை கொண்டுநடத்த முடியாது. இதேவேளை, அவ்வாறானவர்கள் இல்லாமலும் அரசாங்கத்தை முன்கொண்டு நடத்தமுடியும் என்பதை நிரூபிக்கும் வகையில், அவ்வாறானவர்களிடமிருந்து அமைச்சுப் பொறுப்புகளை பறித்தெடுத்து, அமைச்சரவையில் இருந்தும் விலக்கிவிடவேண்டுமென ஆலோசனை கூறப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

## பிள்ளையாருக்கு மேல் புத்தர் சிலை

இனந்தெரியாத விசமிகளால் நேற்று முன்தினம் இரவு இவ்வாறு புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மூதூர் பிரதேச இந்துக் குருமார்களால் நேற்று (26) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

எனினும், ஆர்ப்பாட்டம் இடம்பெறுவதற்கு முன்னரே அங்கு வந்த மூதூர் பொலிஸாரால் குறித்த சிலை எடுத்துச் செல்லப்பட்டது.

எனினும், 64 ஆம் கட்டை மலையடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக மூதூர் பிரதேச இந்துக் குருமார்களும், பொதுமக்களும் ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டபோது, மூதூர் கொட்டியாராம விஹாராதிபதி அவ்விடத்துக்கு வருகை தந்தபோது, சற்று பதற்ற நிலைமையும் வாய்த் தர்க்கமும் ஏற்பட்டது.

அவ்விடத்தில் நேற்றையதினம் இந்துக் குருமார்களும் ,பொதுமக்களும் எதிர்ப்பை வெளிப்படுத்தியபோதும் குறித்த புத்தர் சிலை யாரால் வைக்கப்பட்டதென்று இதுவரை கண்டறியப்படவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

64ஆம் கட்டை மலையடி பிள்ளையார் கோவில் பல வருடகாலமாக அருகிலுள்ள கிராம மக்களானாலும், திருகோணமலை - மட்டக்களப்பு வீதியூடாக பயணம் செய்கின்ற பொதுமக்களாலும் வழிபாடு செய்யப்படுகின்ற கோவில் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று முடிவு

ரயில்வே நிலைய அதிபர் சங்கம், நேற்று (26) நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்க தீர்மானித்திருந்தது.

அந்த தீர்மானத்தை இன்று (27) காலை 10 மணிவரைக்கும் ஒத்திவைத்துள்ளதாக அச்சங்கம் அறிவித்துள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பில் இன்றையதினம் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் அதன்பின்னரே



அடுத்தக்கட்ட தீர்மானத்தை அறிவிக்கவுள்ளதாகவும் அச்சங்கம் அறிவித்துள்ளது.

## அடுப்பு வெடித்து சிதறியதில் வீடு முற்றாக எரிந்து நாசம்

மருமகள் மற்றும் பேரப்பிள்ளையையும் வீட்டை விட்டு உடனடியாக வெளியேற்றினார். அதனையத்து, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அயலவர்களின் உதவியையும் நாடினார்.

எனினும் , கூரை தகரத்தினாலும், ஏனையவை பலகையினாலும் கொண்ட வீடு என்பதால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. குறித்த வீடு முழுமையாக தீயில் எரிந்துள்ளது. வீட்டில் இருந்த இருவருக்கு சிறிய தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சில்லறைக் கடையுடன் கொண்ட குறித்த வீட்டில் இருந்த அனைத்து ஆவணங்களும்,

> **பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு கற்பிட்டி சகாத் ஒன்றியம் பல்வேறான உதவிகளை செய்துவருகின்றது. வீடொன்றை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும் அந்த அமைப்பு முன்வந்துள்ளது**

பொருட்களும், ஆடைகளும் இந்த தீயினால் முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக வீட்டு உரிமையாளரான தாய் கூறியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு கற்பிட்டி சகாத் ஒன்றியம் பல்வேறான உதவிகளை செய்துவருகின்றது. வீடொன்றை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும் அந்த அமைப்பு முன்வந்துள்ளது.









# கிழக்கு மாகாணம்...

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, கடலூர் சந்திவெளி, மட்டக்களப்பு - ஓந்தாச்சிமடம், களுவாஞ்சிகுடி, கல்முனை , காரைதீவு ஆகிய பிரதேசங்களிலும் சுனாமியால் உயிரிழந்தவர்களை அவர்களது உறவினர்கள், பொதுமக்கள் நினைவுக்கூர்வதை படங்களில் காணலாம்...

(படங்கள் - கிழக்கு நிருபர்கள்)













# வடக்கு மாகாணம்...

சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல், வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வுனியா, புதுக்குடியிருப்பு, மன்னார் ஆகிய பிரதேசங்களில் நேற்று (26) நினைவுக்கூரப்பட்டதைப் படங்களில் காணலாம்...

(படங்கள்: வடக்கு நிருபர்கள்)















# மலையகம்...

சுனாமி ஆழிப்பேரலையின் 17ஆவது ஆண்டு நிறைவையொட்டி, சுனாமியால் உயிரிழந்த நாட்டு மக்களுக்கு மலையகத்தின் நுவரெலியா, ஹட்டன் உள்ளிட்டப் பிரதேச மக்களும் அஞ்சி செலுத்துவதை படங்களில் காணலாம்.

(படங்கள் - மலையக நிருபர்கள்)



# அலரி மாளிகையில்...





பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் சுனாமி பேரனர்த்தத்தில் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (26) முற்பகல் அலரி மாளிகையில் விளக்கேற்றுவதைப் படங்களில் காணலாம்..

**அற்றோனி தத்துவத்தினை இரத்து செய்தல்**

கவுடுபெலெல்ல, கவடயாமுன, ஆசிரி உயன, இல. 101 எனும் முகவரியில் வசிக்கும் **புலுத்வத்தே தர்மகீர்திகே கீர்திசந்தன வீரசிங்க** (701290682வி) ஆகிய நான் அதே முகவரியில் வசிக்கும் **கல்லன ஹேரனேகெதர தர்மகீர்தி தேவகே யமுனா வசந்தி தர்மகீர்தி** (707091037வி) அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு ஹிரந்த இத்தமல்கொட அவர்களால் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியுடைய கையொப்பமிடப்பட்ட அற்றோனி தத்துவத்தினை இத்தால் இரத்து செய்கின்றேன் எனவும் அவ் அற்றோனி தத்துவக் காரரின் இதற்குப் பின்னரான எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மக்களுக்கு இத்தால் அறியப்படுத்துகின்றேன்.

**23 டிசம்பர் 2021**
**மாத்தளை**

**பீ.டி.கே. சந்தன வீரசிங்ஹ**

கவனிப்பாரற்ற நிலையில்

# காடு மண்டிய சிறுவர் பூங்கா

எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் சேருவில பிரதேச சபைக்குட்பட்ட சிறுவர் பூங்கா கவனிப்பாரற்ற நிலையால் அடர்த்தியான பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இதனால் மாலை வேளைகளில் சிறுவர்கள் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொவிட் தாக்கம் காரணமாக வருடக்கணக்கில் மூடப்பட்டதால் பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுவதால் அங்கு செல்ல முடியாத நிலை உருவாகியிலுள்ளது.

சேருவில பிரதேச சபையால் பராமரிக்கப்பட்டு வரும் இச் சிறுவர் பூங்கா இதுவரை திறக்கப்படாது இருப்பதால், அங்குள்ள சிறுவர்கள் ஏறி



விளையாடக்கூடிய பெறுமதியான பொருள்களும் துருப்பிடித்து பயன்படுத்த முடியாத நிலையை அடைந்துவருகின்றன.

எனவே, அதற்கு முன்னர் பாரிய சிரமதானங்கள் மூலம் துப்பரவு செய்யப்பட்டு, அப்பகுதி சிறார்கள் விளையாடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

சேருவில பிரதேசத்தினை அண்டிய தோப்பூர் மற்றும் வெருகல் போன்ற பகுதிகளில் சிறுவர் பூங்காக்கள் இல்லாது காணப்படுகின்றது. சேருவிலவில் சிறுவர் பூங்கா இருந்தும் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



## அஞ்சலி செலுத்தினார் சுனாமி பேபி

2004.12.26 திகதியன்று, சுனாமிப் பேரலையில் காணாமல்போய் பின்னர் வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்ட "அபிலாஷ்" என்ற ஆண் சிசுவுக்கு, 9 தாய்மார்கள் உரிமை கொண்டாடியிருந்தனர்.

அப்போதிருந்து "சுனாமி பேபி" என்று அழைக்கப்பட்டு வரும் அபிலாஷ், மரபணுப்பனு பரிசோதனை மூலம் மட்டக்களப்பு – குருக்கள் மடத்தைச் சேர்ந்த ஜெயராசா தம்பதியினரது சிசுவென உறுதிப்படுத்தப்பட்டு, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

தற்போது அபிலாஷிக்கு 17 வயது. அபிலாஷ் தனது இல்லத்தில் வைத்துள்ள சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தூபியில் பெற்றோர் உறவினர்களுடன் இணைந்து நேற்று (26) சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தினார்.

இதன்போது அங்கு வருகை தந்திருந்த வட,கிழக்கு ஒப்பனையாளர் சங்கத்தால் அபிலாஷின் கல்விச் செலவுக்காக ஒரு தொகை நிதியுதவியும் கையளிக்கப்பட்டது.

வ.சக்தி

சட்டவிரோத செயற்பாடுகளால்

## இயற்கை அனர்த்தங்கள் அதிகரிப்பு

எம்.எஸ்.எம். ஹனீபா

சட்டவிரோத செயற்பாடுகளாலேயே இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக, அம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் தெரிவித்தார்.

17ஆவது தேசிய பாதுகாப்பு நினைவு தினத்தையொட்டி, "நிலையான அபிவிருத்தியின் மூலம் அனர்த்தத்துக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய சமூகத்தை உருவாக்குதல்" எனும் தொனிப் பொருளில், அம்பாறை மாவட்ட பிரதான நிகழ்வு, பொத்துவில் பிரதேச செயலகத்தில் நேற்று (26) நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொத்துவில் உதவிப் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பதில் அரசாங்க அதிபர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தால் விரிவான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



இதற்கென அரசாங்கத்தால் அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

"நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளில் அனர்த்த அபாய குறைப்பு, சுற்றுச் சூழல் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்ற நழுவல் போக்கு போன்ற விடயங்களில் ஒன்றாகவும் முறையாகவும் செயற்படாமையின் காரணமாக அனர்த்த ஆபத்து வலுவடைந்தன் விளைவாக இழப்புகளையும் சந்திக்க வேண்டியுள்ளது.

"அனர்த்தத்துக்கு முன்னர் அனர்த்தக் குறைப்பு, தணிப்பு, தயார்ப்படுத்தல். முன்னெச்சரிக்கை பொறிமுறைகளை வலுப்படுத்துதல் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்துதல் அவசியமாகும் என்றார்.

கட்சிக்கு எதிராக செயற்பட்டதால்

## பதவியிழந்தார் ரெபுபாசம்

றியாஸ் ஆதம்



ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் ரெபுபாசத்தை, கட்சியிலிருந்தும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நீக்கியுள்ளது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு தோல்வியடைந்த எம்.எல்.ரெபுபாசம், பட்டியல் ஆசனத்தினூடாக ஏறாவூர் நகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

நகர சபைத் தவிசாளர் தெரிவின் போது, கட்சியினுடைய தீர்மானத்தை புறக்கணித்தும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் செயற்பட்டதால், அவருக்கெதிராக சுதந்திரக் கட்சி ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டது.

மேற்படி ஒழுக்காற்று விசாரணைகளின் தீர்ப்பையடுத்து, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு, அவரது கட்சி உறுப்புரிமையை இரத்துச்செய்து, கட்சியில் இருந்தும் வெளியேற்றியுள்ளது.

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் மற்றுமோர் உறுப்பினரான எம்.எஸ். எம்.ஜவ்பர் என்பவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட்டதால், அக்கட்சி அவருக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு, அவரது உறுப்புரிமையையும் இரத்துச் செய்து கட்சியில் இருந்து வெளியேற்றியுள்ளது.

இதன்படி, ஏறாவூர் நகர சபை மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச சபை ஆகியவற்றில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்குறித்த உறுப்பினர்களின் பதவிகள் நீக்கப்பட்டமை குறித்து, அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, மட்டக்களப்பு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

குறிஞ்சாக்கேணி

## மாணவிகளுக்கு கௌரவம்

ஒலுமுதீன் கியாஸ்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலயத்தில் 2020ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 06 மாணவிகள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம், அதிபர் எஸ். ரீ. நஜீம் தலைமையில், பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் (25) நடைபெற்றது.

நசுருதீன் நஸ்ரின், முசாதிக் தஸ்லிம், முஹம்மது லாபீர் காரியா, அப்துல் ரஹ்மான் அனிஷா, ஜவ்புகான் நபா மற்றும் மசுரூப் முபிதா ஆகிய மாணவிகளே கலைப் பிரிவில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.



தமிழர்களின் கலை வரலாற்றில்

# 'புலிகளின் காலம் பொற்காலம்'

தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம் பொற்காலம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற கலாயைத்தின் வெளியீடான 'விழுதொலிகள்' எனும் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், போர் முடிந்ததன் பின்னரான காலப்பகுதியில் கலைஞர்கள் தங்களின் படைப்புக்களுக்கு உரித்தான அந்தஸ்து கிடைப்பதில்லை என்பதான ஒரு குற்றச்சாட்டு கலைஞர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிறது என்றார்.



உண்மை தான், எம்மவர்கள் இந்த மண்ணில் இருந்தபோது கலைகளையும் கலைஞர்களையும் வளர்க்க விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் என்ற பிரிவு உருவாக்கப்பட்டு, அதனூடாக பாரம்பரிய கலைகளையும் பண்பாட்டையும் வளர்த்திருந்தார்கள் எனவும், அவர் கூறினார்.

'தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலமே பொற்காலம் ஆகும்.

'கலைஞர்களும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆற்றிய பங்கும் மகத்தானது. தங்களின் கலைப்படைப்புக்களால் போராட்டத்தின் பக்கம் மக்களை எழுச்சிகொள்ள வைத்தவர்கள் என்றால் மிகையில்லை.

'கலைஞர்களும் இந்த மண்ணில் மீளும் சிறப்பாக உரிய அந்தஸ்த்தோடு வாழும் காலம் உருவாக்கப்படும்' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் நினைவேந்தல் நிகழ்வு, நேற்று முன்தினம் (25) மாலை, யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில், பிரத்தியோக இடமொன்றில் நடைபெற்றது.

(படப்பிடிப்பு: எஸ். நிதர்ஷன்)

## நூல் வெளியீட்டு விழா

க. அகரன்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வவுனியா பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் வவுனியம் நூல் வெளியீட்டு விழா, வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில், பிரதேச செயலாளர் நா. கமலதாசன் தலைமையில், நாளை (28) காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி த. மங்களேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதேவேளை சிறப்பு விருந்தினர்களாக கலாபூசணம் இ. சிவசோதியும் தமிழ்நிதி அருணா செல்லத்துரையும் கலந்துகொள்வதுடன், கௌரவ விருந்தினர்களாக நா. செந்தூர்செல்வனும் கலந்துகொள்ளவுள்ளார்.

இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர்

## பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

எஸ்.குகன்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2022ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப் புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

ஐசவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பால பண்டிதர் பரீட்சையில் சித்தி அல்லது கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை (இந்துசமயம் அல்லது இந்துநாகரீகம் உட்பட) சித்தி அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அநுட்டித்து வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் கீழ்வரும் தகுதிகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது இளஞ்சைவப் புலவர் தேர்வு அல்லது சித்தாந்த பண்டிதர் தேர்வு (சைவபரிபாலனசபை) அல்லது பண்டிதர் தேர்வு (ஆரிய திராவிடபாசா விருத்திச்சங்கம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் 100 ரூபாய் செலுத்தி, விதிகள் பாடத்திட்டத்துடன் விண்ணப்பப்படிவத்தை பெற்று பரீட்சை கட்டணமாக 500 ரூபாயை, இலங்கை வங்கியில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் கணக்கு இலக்கம் 1133272க்கு வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்னர், சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் தேர்வுச்செயலாளர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், இல: 153, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

வங்கி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக அறவீட்டுக் கட்டணம் 100 ரூபாயுடன், ஜனவரி 31ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதற்குப் பிந்திய விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இப்பரீட்சைகள் தொடர்பான மேலதிக தகவல்களை, 076-6345136 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

இலஞ்சம் ஊழலில் ஈடுபட்ட

## கான்ஸ்டபிளுக்கு இடமாற்றம்

செந்தூரன் பிரதீபன்

அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு, வெள்ளிக்கிழமை (24), திடீர் விஜயம் மேற்கொண்ட பிரதி பொலிஸ் மாஅதிபர், பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்து கொண்டார்.

அத்துடன், கடமையை சரியான முறையில் செய்யாமை, பொதுமக்களிடம் வற்புறுத்தி பணம் பெறுகின்றமை, பொறுப்பு அதிகாரிகளுக்கு பணத்தை தரகராக நின்று பெற்றுக்கொடுக்கும் சம்பவங்கள் தொடர்பில் அறிந்துகொண்டார்.

இதையடுத்து, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள்; ஒருவர் உடனடியாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் பிரதி பொலிஸ் அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பல தடவைகள் வேறு பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டும், மீண்டும் இடமாற்றத்தை இரத்து செய்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்று வந்திருந்தார்.

இவரின் செயற்பாட்டால் பாதிக்கப்பட்ட பொதுமக்களும் பல்வேறு உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

அதேபோல், இந்த விடயம் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து, குறித்த நபர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## தீயில் எரிந்து குடும்பப் பெண்கள் உயிரிழப்பு

செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம் - கச்சாய் தெற்கு பகுதியில், நேற்று (26) தனக்கு தானே தீமூட்டி, குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குபேனி கோகுல்ராஜ் (வயது 27) என்பவரே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார் என, கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

திருமணமாகி 11 மாதங்கள் கடந்த நிலையில் குடும்பப் பெண் இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளதாக, கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர், ஏன் இவ்வாறான முடிவை எடுத்ததாக இதுவரை தெரியவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கூறினர்.

இதேவேளை, தனக்கு தானே மூட்டிக்கொண்ட பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை



பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி, நேற்று (26) உயிரிழந்ததாக, யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.



அவசரமாக வீட்டுக்குச் சென்ற இளைஞனை

# சுற்றி வளைத்து தாக்கிய ஓட்டோ சாரதிகள்

**ஹட்டனில் சம்பவம்**

■ ரஞ்சித் ராஜபக்ஷ

டிக்கோயா- போடைஸ் தோட்டத்திலுள்ள உயவினர்கள் வீட்டுக்கு அவிசாவளையிலிருந்து சென்ற இளைஞர் ஒருவர், ஹட்டன் நகரில் வைத்து, ஓட்டோ சாரதிகள் சிலரால் நேற்றுமுன்தினம் (25) அதிகாலை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

ஹட்டன் நகர மத்தியிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவிசாவளையிலிருந்து ஹட்டன் வரை பஸ்ஸில் பயணித்துள்ள அவர், அன்றைய தினமே அவிசாவளைக்கு திரும்ப வேண்டியிருந்தது. இந்த நிலையில், போடைஸ் தோட்டத்துக்குச் செல்வதற்கு ஓட்டோவொன்றில் 600 ரூபாய் வாடகை அடிப்படையில் பயணித்து, மீண்டும் அதே ஓட்டோவில் ஹட்டனுக்கு வந்து இறங்கியுள்ளார்.

இதன்போது தான் முன்னதாக இணங்கியதுக்கு அமைய 600 ரூபாய் கட்டணத்தை ஓட்டோ சாரதியிடம் வழங்கியுள்ளார். எனினும், 600 ரூபாய் போதாதென தெரிவித்த ஓட்டோ சாரதி, 1,800 ரூபாயை கோரியுள்ளார்.

எனினும், தன்னிடம் அந்தளவுக்கு பணம் இல்லையென அந்த இளைஞன் தெரிவித்துள்ளார். அதனையடுத்து, குறித்த ஓட்டோ சாரதி ஏனைய ஓட்டோ சாரதிகளுடன் இணைந்து அந்த இளைஞனை பலவந்தமாக ஓட்டோவுக்குள் ஏற்றிச்சென்று கடுமையாகத் தாக்கி, வெளியே தள்ளியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஹட்டன் பொலிஸ் நிலை அதிகாரியொருவரிடம் வினவியபோது, ஹட்டன் நகரில் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றிருப்பதாகவும் எனினும், தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு எதுவும் செய்யாத காரணத்தால், சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

யாருடைய நன்மைக்காக

# மீண்டும் கூட்டொப்பந்தம்?

**விளக்கமளிக்க வேண்டும் என்கிறார் விஜேசந்திரன்**

■ டி.ஷங்கீதன்

மலையக மக்களின் அடிமை விளங்காக இருந்த கூட்டொப்பந்தத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டுமென தொழிற்சங்க போராட்டம் முன்னெடுப்பதற்கு காரணம் தொழிலாளர்களின் நன்மை கருதியா?அல்லது தொழிற்சங்கங்களின் நன்மை கருதியா? என்றக் கேள்வி எழுகின்றது.எனவே இது தொடர்பாக உரிய விளக்கம் அளிக்கப்பட வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான விஜேசந்திரன் கோரியுள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் அடிமை சாசனமாக இருந்த கூட்டொப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டும் என்பதையே அநேகமான தொழிற்சங்கங்களின் நிலைப்பாடாக இருக்கின்றது. ஆனால் மீண்டும் அதனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்துவது எதற்காக என்பதை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் நேற்று (26) ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெருந்தோட்ட தொழிலாளர்களின் கூட்டெப்பந்தமானது 1998 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. அன்றைய சூழ்;நலையில் அதில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் பொருத்தமானதாக இருந்திருக்கலாம்.ஆனால் இன்றைய கால கட்டத்துக்கு அது பொருத்தமானதா?என்ற கேள்வி எழுகின்றது.

எனவே, மீண்டுமொரு கூட்டொப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமாக இருந்தால் பழைய கூட்டொப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படியானால் இன்றைய நடைமுறைக்கு ஏற்றவகையில், தொழிலாளர்களுக்கு நன்மை தரக்கூடிய வகையில புதிய கூட்டொப்பந்தமாக அமைய வேண்டும்.அது சர்வதேசத்தரத்திலான ஒரு தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தமாக அமைய வேண்டும் என்றார்.

எனவே, புதிய கூட்டொப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமாக இருந்தால் அதற்காக ஒரு தனி குழுவொன்று அமைக்கப்பட வேண்டும்.அந்த குழுவில் அனைத்து தொழிற்சங்கத்தின் பிரதி நிதிகளும் பங்குபற்ற வேண்டும் என்றார்.



# செயலமர்வு



பசறை தபால் நிலையத்தைச் சேர்ந்த பெருந்தோட்ட தபால் ஊழியர் சங்கத்தினர் ஏற்பாடு செய்த தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான, இலவச கற்றல் வழிகாட்டல் செயலமர்வு பசறை -ஆக்கரத்தன்ன தமிழ் வித்தியாலயத்தில் நேற்று (26) இடம்பெற்றது. (நடராஜா மலர்வேந்தன்)

காட்டு யானைகளின் அட்டகாசத்தால்

# உடதும்பர மக்கள் பாதிப்பு

■ மொஹெமட் ஆஸிக்

உடதும்பர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல கிராமங்களுக்கு இரவு வேளைகளில் காட்டுயானைகள் புகுந்து, சேதம் விளைவித்து வருகின்றன என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை. கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களின் எல்லைகளில் இருக்கும் இப்பிரதேசத்தில், இவ்வாறு காட்டுயானைகள் புகுந்து தமது விவசாயப் பயிர்செய்கைகளுக்கு சேதம் ஏற்படுத்துவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.




விவசாயத்தை மட்டும் நம்பிவாழும் குறித்த பிரதேச மக்கள், இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதிகாரிகள் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை எனவும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஹட்டன் நகரில்

# சமையல் எரிவாயு மோசடி

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கலவை குறிப்பிடப்பட்டுள்ள 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று 3,500 ரூபாய்க்கு ஹட்டன் நகரில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

லிட்ரோ நிறுவன விற்பனை பிரதிநிதிகளுக்கு அந் நிறுவனத்தால் வழங்கப்பட்ட சிலிண்டர்கள் வர்த்தக நிலையங்களில் களஞ்சியப்படுத்தப்படாமல், குறித்த விற்பனை முகவர்களின் வீடுகளில் களஞ்சியப்படுத்தப்பட்டு ஓட்டோக்கள் மூலம் கொண்டு சென்று 3,500 ரூபாய்க்கு விநியோகிக்கப்படுகின்றது.

12.5 கிலோகிராம் நிறையுடைய கலவை குறிப்பிடப்பட்ட சமையல் எரிவாயு 2,765 ரூபாய்க்கு விற்கப்பட வேண்டியெ நிலையில், ஹட்டன் நகரிலுள்ள சில சமையல் எரிவாயு விற்பனை முகவர்களால் இந்த மோசடி வர்த்தகம் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சந்தைகளில் சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு காணப்படும் நிலையில், சில வர்த்தக முகவர்கள் இந்த மோசடி வர்த்தகம் மூலம் அதிக இலாபமீட்டுவதாகவும் தமது வரத்த்க நிலையங்களுக்கு முன்பாக சமையல் எரிவாய இல்லையென அறிவிப்பை தொங்கவிட்டு, வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு, வேறு இடங்களிலிருந்து இந்த வர்த்தகத்தில் ஈடுபடுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

# சமாதான நீதவான்கள்



பசறை இல. 13/1, தீக்கிலாபொத்த, பெல்கஹதென்ன எனுமிடத்தைச் சேர்ந்த இராமசுந்தரம் ரகுராஜ், பதுளை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஆர்.எம்.எஸ். நயந்த சமரதுங்க முன்னிலையில், அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துக்கொண்டார்.

அரச சார்பற்ற நிறுவனத்தில் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளராக கடமையாற்றி வரும் இவர், பது/ ஆக்கரதன்னை தமிழ் வித்தியாலயத்தில் பழைய மாணவர் ஒன்றியத்தில் செயலாளராகவும், தமிழ் மொழி மூல தலைமைத்துவப் பயிற்சி, தகவல் உரிமைச் சட்டம், மலையக மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிப் பற்றிய வளவாளராகவும் கடமையாற்றுவதுடன், பசறை தமிழ்த் தேசிய கல்லூரியின் பழைய மாணவனான இவர், பசறை, தீக்கிலாபொத்தையைச் சேர்ந்த இராமசுந்தரம், ராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வனுமாவார்.



பதுளை, இல 16/12, 2ம் ஒழுங்கை, கீழ்ராஜ வீதி யைச் சேர்ந்த நடேசன் சுரேஸ் பதுளை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஆர்.எம். எஸ். நயந்த சமரதுங்க முன்னிலையில், அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துக்கொண்டார்.

அரச சார்பற்ற நிறுவனமான ஊவா சக்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக கடமையாற்றி வரும் இவர், தலைமைத்துவம், திறன் அபிவிருத்தி, சமூக பொருளாதார வளர்ச்சிப் பற்றிய வளவாளராகவும் கடமையாற்றுவதுடன், ஜனாதிபதி கொவிட் -19 ஒழிப்பு செயலணியின் பதுளை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்பான பிரதிநிதியாகவும் செயற்பட்டு வருகின்றார்.

மலையகத்துக்கான பத்தாயிரம் வீட்டுத் திட்டம்

# வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும்

**ராமேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு**

■ எஸ்.கணேசன்

" மலையகத்துக்கான பத்தாயிரம் வீட்டுத்திட்டம் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும். என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரனின் 45ஆவது பிறந்தநாள் நேற்றாகும் (26) அதனை முன்னிட்டு, கார்லபேக் தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைத்தார். அந் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

கொரோனா நெருக்கடி காலத்திலும் நாட்டுக்கு தேவையான முக்கியமான அபிவிருத்தி திட்டங்கள் நிறுத்தப்படவில்லை. அதற்கான பணிகளை நிதி அமைச்சர் சிறந்த முறையில் முன்னெடுத்து நிதி ஒதுக்கீடுகளை வழங்கிவருகின்றார். மலையகத்துக்கான 10 ஆயிரம் வீட்டுத் திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றார்.



" மலையக சமூகத்தின் வளர்ச்சியென்பது கல்வியில்தான் தங்கியுள்ளது என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம். அதனால்தான் ஐயா சௌமியமூர்த்தி தொண்டமான், தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலம் முதல் இன்றுவரை கல்விக்கு நாம் அதிக நிதியை ஒதுக்குகின்றோம். கல்வி சார்ந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம். உதவிகளை செய்கின்றோம்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவும் அடக்குமுறைகள் இன்று கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்நிலைமை மாறுவதற்கும் கல்வியே எமக்கு கைகொடுக்கும். எமது பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் கண்டால் நிச்சயம் வீறுநடை போடலாம். அதற்கு பக்கபலமாக காங்கிரஸ் துணை நிற்கும் என்றார்.

மக்களின் வயிற்றுப் பசியைத் தீரக்க

# அரசாங்கம் தவறிவிட்டது

**சாடுகிறார் வடிவேல் சுரேஸ் எம்.பி**

நாட்டு மக்களுடைய வயிற்றுப் பசியை தீர்த்து வைக்க அரசாங்கம் தவறிவிட்டதெனத் தெரிவித்த, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ், இதனால் முக்கியமாக பெருந்தோட்ட மலையக மக்கள் இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றார்.

ஹப்புத்தளை- காகல்ல தோட்ட மக்களின் நீண்டநாள் தேவைப்பாடாக இருந்த, பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா, நேற்று முன்தினம் (25) நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட சந்தர்ப்பத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

பெருந்தோட்ட மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் வர்த்தமானி என்ற நாடகம் இன்றளவும் முடிவில்லா நாடகமாக அரங்கேற்றப்பட்ட கொண்டே இருக்கின்றது. இதனிடையே குறுகிய காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மூன்று மடங்குகளால் அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாது எரிபொருட்களின் விலை அதிகரிப்பால் போக்குவரத்து வாகனங்களின் கட்டணமும் அதிகரித்துள்ளது. மேலும் எரிவாயு தட்டுப்பாடு, எரிவாயு அடுப்புகள் வெடிப்பு சம்பவங்களினாலும் மக்கள் பாரியதோர் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பெருந்தோட்ட மலையக மக்கள் இந்த நாட்டினுடைய மிக முக்கிய பொருளாதார பங்குதாரர்களாக இருந்த போதிலும், சொற்ப வருமானத்தையே அவர்கள் பெறுகின்றார்கள். ஆயிரம் ரூபாய் வர்த்தமானிக்கு பின்னர் பெருந்தோட்ட நிர்வாகங்களின் தன்னிச்சையான செயல்பாடுகளினால் அவர்களுடைய வேலைநாள் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எதிராக பல அடாவடி செயற்பாடுகள் பெருந்தோட்ட நிர்வாகங்கள் முன்னெடுக்கின்றன என்றார்.

பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நோர்வூட் மக்களுக்கான

# அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன

**தவிசாளர் ரவி தெரிவிப்பு**

■ கே. சுந்தரலிங்கம்

நாட்டில் எவ்வளவு பிரச்சினைகள் காணப்பட்ட போதிலும் நோர்வூட் பிரதேச மக்களுக்கான அபிவிருத்திகள் கைவிடப்படவில்லை என, நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் கே.கே.ரவி தெரிவித்துள்ளார்.

கெம்பியன் மேல் பிரிவு கோவிலின் புனரமைப்பு பணிகளை நேற்று முன்தினம் (25) ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் நாட்டில் கொரோனா தொற்று பரவல் காரணமாக நாட்டில் பல்வேறு பிரதேசங்களின் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகள் நிறுத்தப்பட்டுள்ளன.



கடந்த காலங்களில் வீதி அபிவிருத்திக்காக கொண்டு வந்து கொட்டிய கல்லை கூட எடுத்து சென்றார்கள். பல வீதிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள் ஆனால் புனரமைக்கப்படவில்லை. எனினும், நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு விதமான அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன என்றார்.

ஆகவே, மக்கள் ஒற்றுமையாக இருந்து தமக்கு தொடர்ந்தும் ஒத்துழைத்து வந்தால், இந்த பிரதேசத்திற்கு தேவையான அபிவிருத்தியினை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஊடாக பெற்றுக்கொடுப்போம் என்றார்.

# காலந்தாழ்த்தாது இறங்கினால் ஓரளவுக்கு தப்பிக்கலாம்

கண்விழித்து எழும்புவதற்குள் என்னென்ன பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன, எவ்வாறான பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதையெல்லாம் யூகிக்க முடியாத நிலைமைக்குள் நாடு சென்றுவிட்டது. அடுத்து என்ன நடக்குமென்ற அச்சம் ஒவ்வொருவர் இடத்திலும் சூழ்கொண்டுவிட்டது.

பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு, நுகர்வோருக்கு நியாயமான விலைகளில் விற்பனைச் செய்யமுடியாது, என்பதற்கு அப்பால், காஸ் அடுப்புகள் வெடித்துவிடுமோ உள்ளிட்ட அச்சம் காரணமாக. நாடளாவிய ரீதியிலுள்ள ஹோட்டல்கள் பல இழுத்து மூடப்பட்டுவிட்டன. இன்னும் சிலர் மாற்றுத் தொழில்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு நிமிடங்களுக்கு இனம்புரியாத அச்சம், ஒவ்வொருவர் மனங்களிலும் சூழ்கொண்டுவிடுகின்றது. பிரதான உணவுப் பொருளான, அரசிக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடுமென எல்லோரும் நினைக்கின்றனர். இதனால், எதிர்வரும் மாதங்களில் ஒரு கிலோகிராம் நிறையைக் கொண்ட சாதாரண அரிசியின் விலை 250 ரூபாய்க்கும் 400 ரூபாய்க்கும் இடைப்பட்ட விலையொன்றில் விற்கப்படக்கூடுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அசைவ உணவுகளின் விலை அதிகரிக்கும்போது, சைவ உணவுக்கு மாறிக்கொள்ளும் நிலை மாறிப்போய் மாற்று உணவைத் தேடிக்கொள்ள முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. மரக்கறிகளின் பக்கமே பார்க்கமுடியவில்லை. பேலியகொடை சந்தைக்கு நாளொன்றுக்கு சுமார் 30 தொன் மரக்கறிகளே வருகின்றன. அதுவும், ஒவ்வொன்றாகத் தேடித்தேடி கொள்வனவு செய்யுமளவுக்கு வாடி, வதங்கி இருக்கின்றன என பலரும் புலம்புகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட உரத்தட்டுப்பாட்டால், விவசாயிகள் பலரும் போகங்கள் மீது கவனத்தை செலுத்தவில்லை. ஒவ்வொரு பயிர்களுக்கும் காய் உரம், இலையுரம், கிழங்கு உரம் உள்ளிட்ட உரங்கள் முக்கியமானவை. ஆனால், வீட்டுத்தோட்டங்களை செய்வோருக்கு உரம் பெரும் பிரச்சினையாக இருக்காது. கிடைக்கும் கழிவுகள் மற்றும் சேதனப் பசளையைக் கொண்டு வீட்டுக்குத் தேவையானதை உற்பத்தி செய்துகொள்ளலாம்.

ஆனால், தண்ணீர்க் கட்டணங்களைச் செலுத்துவோர், வீட்டுத்தோட்டங்கள் மீது பெரிதாக கவனத்தை செலுத்தமாட்டார்கள், எனினும், காத்திருக்காமல், கிடைக்கும் பயிர்கள், ஊடுபயிர்கள் உள்ளிட்டவற்றை வீட்டுத்தோட்டங்கள் அல்லது பூத்தொட்டிகளில் நடுகைசெய்யவேண்டும். காலந்தாழ்த்தாது களத்தில் இறங்கினால் மட்டுமே ஓரளவுக்குத் தாக்குப் பிடிக்கலாம்.

வீட்டுத்தோட்டங்கள் இல்லாதவர்கள் கூட, ஏதாவது முறைமையை கையாண்டு, சிறுசிறு பயிர்களை நடவேண்டும். இல்லையேல், வாய்க்கு ருசியாகவும், உடலுக்கு ஓரளவுக்கேனும் சத்து கிடைக்கும் வகையிலும் எதனையுமே உண்ணமுடியாது.

சம்பளம் கிடைத்த மறுநிமிடத்திலேயே கடனாளியாகும் நிலைமையில் பலரும் இருப்பர். அவ்வாறனவர்கள் அத்தியாவசியமற்ற தேவைகளை கொஞ்ச நாட்களுக்குத் தள்ளிவைத்துவிட்டு, உடல் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்தவேண்டும். அதனூடாக ஓரளவுக்கேனும் நோயெதிர்ப்பு சக்தியை பெற்றுக்கொள்ளலாம்.

“சுவர் இருந்தால்தான் சித்திரம் கீறமுடியும்” என பலரும் கூறுவர். ஆகையால், நாளைக்கு என்று தள்ளிப்போடுவதை தவிர்த்து, வீட்டுத் தோட்டத்தின் மீது உடனடியாக கவனம் செலுத்தினால், ஓரளவுக்குத் தாக்குப்பிடிக்கலாம் என்பதே எமது அறிவுரையாகும்.

## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும்போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளுடனும்கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக நாம் எதிரிகளுடன் பழகுவது வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புத்தான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், ‘நான்’ என்ற மமதை கலக்காது, பணிவுடன் பேசுவதே, நிரந்தர வெற்றிக்கு வழி!

கர்வம், அகங்காரம், கோபம் போன்ற துர்க்குணங்கள் தனது, குடும்பம், அயலட்டை, கிராமம், தேசம் என்பவற்றின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# ஓய்வு பெறுங்கள், சம்பந்தன் ஐயா!



என்.கே.அஷோக்பரன்

Twitter: @nkashokbharan

எதிர்வரும் பெப்ரவரி வந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவிற்கு 89 வயது கழிந்து, தனது 90வது ஆண்டில் அவர் அடியெடுத்து வைக்க இருக்கிறார். பிரித்தானிய முடியின் கீழான கொலனியாக இலங்கை இருந்தபோது பிறந்தவர் இராஜவரோதயம் சம்பந்தன். டொனமூர் அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகளில் பிறந்தவர். இலங்கை 1948ல் சுதந்திரம் பெறும் போது அவருக்கு 15 வயது கழிய ஒரு நாள் குறைவு.

இலங்கைச் சட்டக் கல்லூரியில் கற்று சட்டத்தரணியாக பணிபுரிந்த அவர், 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில், தனது 44 ஆவது வயதில், திருகோணமலையில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டு பாராளுமன்றம் செல்கிறார். 1983 செப்டெம்பரில் பாராளுமன்ற ஆசனத்தை இழந்த இரா. சம்பந்தன், அதன் பின்னர் 1989, மற்றும் 1994 தேர்தல்களில் தோல்வியடைந்திருந்தார்.

1994 ஆம் ஆண்டு தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிட்டு வெற்றியீட்டியிருந்த சட்டத்தரணி அருணாசலம் தங்கத்துரை, 1997 ஜூலை 5 ஆம் திகதி திருகோணமலை ஶ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி நிகழ்வில் கலந்துகொண்டு வெளியேறும் போது அடையாளமறியா நபர்களினால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள்தான் படுகொலை செய்தார்கள் என்று பொலிஸ் விசாரணைகள் குறிப்பிட்டிருந்தன. அருணாசலம் தங்கத்துரையின் படுகொலையின் பின், ஏற்பட்ட வெற்றிடத்திற்கு 1997ஆம் ஆண்டு சம்பந்தன் நியமிக்கப்பட்டார். 1983ஆம் ஆண்டு பாராளுமன்ற ஆசனத்தை இழந்த சம்பந்தன் 1997 ஆம் ஏறத்தாழ 14 ஆண்டுகளின் பின் பாராளுமன்றம் ஏகினார். மறுபடியும் 2000ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்ட சம்பந்தன், 2001ஆம் ஆண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் 2004, 2010, 2015, மற்றும் 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார். 2015 □ டிசெம்பர் 2018 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்ததன் மூலம், அந்தப் பதவியை வகித்த இரண்டாவது தமிழர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார். தனது 89 வருட வாழ்வில் 29 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்திருக்கிறார் இரா. சம்பந்தன்.

இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றின் முக்கிய காலகட்டங்கள், திருப்பு முனைகள் என்பவற்றை நேரடியாகப் பார்த்த, அதில் பலவற்றில் பங்காளியாக இருந்த பழுத்த அனுபவம் மிக்க தலைவர் இரா. சம்பந்தன் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அதுபோலவே பாராளுமன்ற மரபுகளை, நடைமுறைகளை நன்கறிந்த, அனுபவம் மிக்க சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களுள் இரா. சம்பந்தன் முக்கியமானவர் என்பதிலும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

இன்று கூட அவர் பாராளுமன்றத்தில் எழுந்து உரையாற்றினால், அந்த உரை பெருமளவிற்கு அமைதியாக கேட்கப்படுமளவிற்கு மதிப்பு மிக்க மனிதராகவே அவர் பார்க்கப்படுகிறார். அண்மை ஆண்டுகளில் அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சந்தர்ப்பங்கள் குறைவு என்றாலும், அவர் ஆற்றியிருந்த ஒரு சில உரைகள் கூட ஆழமானதாகவும், அர்த்தபுஷ்டியுள்ளவையாகவும் அமைந்திருந்தன.

அவரது சில பாராளுமன்ற உரைகள், இலங்கைப் பாராளுமன்றம் கண்ட ஆகச் சிறந்த உரைகள் பட்டியலில் நிச்சயம் இடம்பெறும் தகை மிக்கவை. ஆனால் தற்போது அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதில்லை என்பது மட்டுமல்ல, பாராளுமன்றத்திற்கு செல்வது கூட மிகக் குறைவு என்பது வருத்தத்திற்குரிய விடயமாக இருக்கிறது.

இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பை அளவிடும் சுயாதீன இணையத்தளமான மந்த்ரி.எல்கே பங்களிப்பு அளவீடுகளின் படி சம்பந்தன் அவர்களை 225 உறுப்பினர்களில், 219வது இடத்தில் தரமிட்டுள்ளது. இந்த முறை சம்பந்தன் அவர்கள் வெறும் 3 முறையே பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்றுள்ளதாக அந்த இணையத்தளம் குறிப்பிடுகிறது.

கொவிட்-19 அபாயம், அவரது வயது மூப்பு, உடல்நிலை என சம்பந்தன் அவர்கள் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்காததற்கு பல நியாயங்களும், காரணகாரியங்களும் சொல்லப்படலாம். அவை உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் முதற் கடமை பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளுதலாகும். அதற்காகத்தான் அவர்கள் மக்கள் பணத்தில் ஊதியம் பெறுகிறார்கள். பாராளுமன்ற அமர்விலும், செயற்பாடுகளிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்காவிட்டால், அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதன் நோக்கமும், பயனும்தான் என்ன என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

பாராளுமன்ற உறுப்பினருக்கு சம்பளம், பலவகைமைப்பட்ட கொடுப்பனவுகள், தனிப்பட்ட ஊழியர்கள் சிலருக்கான சம்பளங்கள், ஒவ்வோர் அமர்விலும் கலந்துகொள்ள கொடுப்பனவு, குறைந்த விலையில் பாராளுமன்றத்தில் உணவு, அவர்களுக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என ஏகப்பட்ட சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அளவு போதுமானதா இல்லையா என்ற விவாதம் ஒருபுறமிருக்க, பெறும் சம்பளத்திற்கும், சலுகைகளுக்கும் ஏற்ற பங்களிப்பை அவர்கள் வழங்குகிறார்களா என்ற கேள்வி பலருக்கும் எழுகிறது. குறிப்பாக இரா. சம்பந்தன் அவர்களைப் போன்ற பழுத்த அனுபவமிக்க பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளாதிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஒருவேளை பலர் சொல்வது போல அவர் வயத மூப்பின் காரணமாக, அல்லது உடல்நிலையின் காரணமாக கலந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கிறார் என்றால், அவர் அரசியலிலிருந்து ஓய்வு பெற விரும்பாவிட்டாலும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ஓய்வுபெற்று திருக்கோணமலையில் இன்னொரு இளம் அரசியல்வாதிக்கு வாய்ப்பளித்தலே உசிதமான காரியம்.

44 வயதில் பாராளுமன்றத்திற்கு வந்த இரா. சம்பந்தன், 89 வயதிலும், தன்னால் திருகோணமலை மக்களுக்கு களத்தில் நின்று முழுமையாகப் பணி செய்ய முடியாத நிலையிலும் கூட தனது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இறுகப்பற்றிக் கொண்டிருப்பது நியாயமா என்ற கேள்வியை அவரும், அவரது ஆதரவாளர்களும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

அண்மையில் சம்பந்தன் அவர்கள் ஓய்வுபெற வேண்டும் என்ற கருத்து அதிகமாகப் பேசப்படும் நிலையில், “வசதிகளை அனுபவிப்பதற்காக அரசியலுக்கு வந்தவன் அல்ல. தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு முடிவு காணக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காகவே அரசியலுக்கு வந்தவன் நான். எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதை பெறாமல் அரசியலில் இருந்து நான் விடைபெறப் போவதில்லை” என்ற பகட்டாரவாரப் பதிலை வழங்கியிருந்தார். அரசியலிலிருந்து விலகுவதும், விலகாமல் இருப்பதும் அவர் விருப்பத்தின் பாற்பட்டது. ஆனால், பாராளுமன்ற அமர்வுகளில் தொடர்ச்சியாகப் பங்குபற்ற முடியாத நிலையில், திருகோணமலை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக மக்களை தொடர்ந்து சந்தித்து தனது கடமைகளை ஆற்ற முடியாத நிலையில் அவர் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் தக்கவைத்திருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு விடயமல்ல.

அவரது அனுபவமும், அறிவும், அதன்பாலான ஆலோசனைகளும் தமிழர் அரசியலுக்கு தேவையான உரம். ஆனால் அவரது பங்களிப்பு அந்தளவில் அமைவதுதான் காலத்திற்கேற்றது. சம்பந்தன் அவர்களுக்கு பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்துவிடும் வாய்ப்புள்ளது, அவர் ஓய்வுபெற்றால் அடுத்த தலைவர் யாரென்ற பிரச்சினை வரும் போன்றவை சம்பந்தன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக நீடிப்பதற்கான நியாயமாக காரணங்கள் அல்ல. சம்பந்தன் அவர்கள் அரசியலில் தொடரும் வரைதான் மேற்சொன்ன பிரச்சினைகள் ஏற்படாது என்பது, மேற்சொன்ன பிரச்சினைகளுக்கு தீர்வல்ல, மாறாக பிரச்சினையின் தீவிரத்தை தள்ளிப்போடும் வழி மட்டும்தான்.

தனது மிகநீண்ட அரசியல் வாழ்வில் தமிழர் அரசியலுக்கு கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ள சம்பந்தன் அவர்களின் சிறப்பை வரலாறு சொல்லும், ஆனால் அந்த வரலாற்றில் அவர் இளைஞர்களுக்கு வழிவிடாது, திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தானே தன் இறுதிவரை பற்றிக்கொண்டிருந்தார் என்பது ஒரு கரும்புள்ளியாக அமைந்துவிடக்கூடாது.

சம்பந்தன் ஐயா, நீங்கள் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை அரசியலில் இருக்க விரும்பினால், கூட்டமைப்பின் தலைவராக, ஆலோசகராக, வழிகாட்டியாக இருங்கள். ஆனால் பாராளுமன்றத்திற்கே போகாமல் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது ஏற்புடையதல்ல. யாழ்ப்பாணத்திற்கு அடுத்த தலைமுறை அரசியல்வாதிகளை அறிமுகப்படுத்திய நீங்கள், திருகோணமலை யில் அதைச் செய்யவில்லை. இனியும் அந்த திருகோணமலை ஆசனத்தை நீங்கள் பற்றிக்கொண்டிருந்தால், திருகோணமலை மக்கள் வரும் தேர்தலில் உங்களைத் தோற்கடித்து அதை உங்களுக்குப் புரிய வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆட்படுவர். அது தமிழருக்கும், தமிழர் அரசியலுக்கும் அழகானதொன்றாக இருக்காது.

ஓய்வு பெறுங்கள், சம்பந்தன் ஐயா.

## கடிதங்கள்

### யானைகளை கட்டுப்படுத்தவும்



மட்டக்களப்பு மாவட்டத்தில், வெல்லாவெளி பிரதேச செயலக நிர்வாக எல்லைக்கு உட்பட்ட கண்ணபுரத்தில், இரவு வேளையில் யானைகளின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென, பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

எல்லைப் பிரதேசங்களில் யானைகளது பிரச்சினை, தீர்வுகாண முடியாத நெருக்கடியாக உள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில், யானைகளால் தாக்கப்பட்டு பலர் உயிரிழந்த சம்பவங்கள் நிகழ்ந்தும், அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

யானைகளின் தாக்குதல்களானது, மனித இனத்துக்குச் சவாலாக மாறியுள்ளன. அண்மையில், குறித்த பிரதேசத்தில் இரவு வேளையில் நுழைந்த யானைகள், குடியிருப்பைச் தேசப்படுத்திய சம்பவம் பதிவாகியுள்ள நிலையில், மீண்டும் யானைகளால் கிராம மக்கள் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர். கிராமத்துக்குள் உள்நுழைந்த யானைகள், செங்கல் உற்பத்தியை முழுமையாகச் தேசப்படுத்தியதுடன் வீட்டுத் தோட்டப் பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளன.

விவசாயம், செங்கல் உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்ட இம்மக்களின் நீண்ட நாளாகப் பேசப்படுகின்ற யானைகளின் பிரச்சினைக்கு, சிறந்த தீர்வை அரச அதிகாரிகள் மாத்திரமல்லாது அரசியல்வாதிகளும் பெற்றுத்தர வேண்டும் என்பது கண்ணபுர கிராம மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இ. சுதாகரன்

கமட்ட சன்னிவேதனய திட்டத்துக்கு

# SLT-MOBITEL ஆதரவு

SLT-MOBITEL, கமட்ட சன்னிவேதனய திட்டத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தில் முதலாவது கிராமிய 4G கோபுரத்தை நிறுவியுள்ளது. இலங்கைக்கு 100% 4G LTE இணைப்புத்திறனை ஏற்படுத்துவதற்கு வலுவூட்டும் வகையில் இந்த கமட்ட சன்னிவேதனய திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குருநாகல், ஹிருவல்பொலவில் நிறுவப்பட்டுள்ள இந்த கோபுரத்தை இலங்கை தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. குருநாகல், ஹிருவல்பொல கிராமங்களைச் சேர்ந்த சகலருக்கும் அவசியமான இணைப்பு உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டிருப்பதை உறுதி செய்யும் வகையில் இது அமைந்துள்ளது. புரோட்பான்ட் அடிப்படையிலான வாடிக்கையாளர் மற்றும் நிறுவனசார் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு SLT-MOBITEL தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், TRCSL இன் கமட்ட சன்னிவேதனய திட்டத்தின் சகல இலங்கையர்களுக்கும் சிறந்த இணைப்புத்திறனை ஏற்படுத்திக் கொடுக்கும் இலக்குக்கு பங்களிப்பு வழங்குகின்றது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில் SLT-MOBITEL இனால் புத்தாக்கமான டிஜிட்டல் மாற்றியமைப்பு படிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், NB-IOT, 5G, AI மற்றும் Big Data ஆகிய புது யுக தொழில்நுட்பங்களை பின்பற்றுவதை உறுதி செய்வதற்கான பணிகளையும் மேற்கொள்கின்றது.

வலையமைப்பு சிறப்பை வெளிப்படுத்தி SLT-MOBITEL மொபைல் தொடர்ச்சியாக சர்வதேச இணைய வேக பரிசோதனை அமைப்பான Ookla வினால், 2020 ,2019 மற்றும் 2021 இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் இலங்கையின் வேகமான மொபைல் வலையமைப்பாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையின் டிஜிட்டல் மாற்றியமைப்பு பணிகளில் மத்திய பணியாக இதுவரையில் SLT-MOBITEL இனால் இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு, 800 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், 5G உடன் தொடர்புடைய தொழில்நுட்பங்களான பரிசோதனை, பரீட்சிப்பு மற்றும் பொது மக்களுக்கான விளக்கமளிப்புகள் போன்றவற்றுக்காக ரூ. 1.5 பில்லியனை பயன்படுத்தியுள்ளது.




ஒரு மில்லியன் மெட்ரிக் டொன் உற்பத்தி விரிவாக்கத்துக்கு

# டோக்கியோ சீமெந்து அடிக்கல் நாட்டல்

திருகோணமலையில் தொழிற்சாலை விரிவாக்கத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வை டோக்கியோ சீமெந்து (கம்பனி) லங்கா பிஎல்சி அண்மையில் முன்னெடுத்திருந்தது. அதனூடாக தனது உற்பத்திக் கொள்ளளவை 1 மில்லியன் மெட்ரிக் டொன்களால் அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். 2023 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்தத் திட்டம் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், டோக்கியோ சீமெந்து குழுமத்தின் மொத்த நிறுவப்பட்டுள்ள கொள்ளளவு 4 மில்லியன் மெட்ரிக் டொன்களாக அதிகரிக்கச் செய்யும். அதன் மூலம் இலங்கையின் மாபெரும் சீமெந்து உற்பத்தியாளர் எனும் தனது நிலையை மேலும் நிறுவனம் உறுதி செய்யும்.

திருகோணமலையிலுள்ள டோக்கியோ சீமெந்து தொழிற்சாலையின் புதிய விரிவாக்கத் திட்டம் என்பது, உள்நாட்டின் நிர்மாணத் துறையில் அதிகரித்துச் செல்லும் கேள்விக்கேற்ப நிறுவனம் விநியோகத்தை மேற்கொள்வதற்கு தன்னை தயார்ப்படுத்துவதை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. 18 மாத கால விரிவாக்கத்திட்டத்துடன், சந்தையின் முன்னணி சாதாரண போர்ட்லாந்து சீமெந்து மற்றும் பிளென்டட் ஹைட்ரோலிக் சீமெந்து வர்த்தக நாமங்களான டோக்கியோ சுப்பர், நிப்பொன் சீமெந்து மற்றும் நிப்பொன் சீமெந்து ப்ரோ ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை டோக்கியோ சீமெந்து மேற்கொள்ளும். இந்தச் செயற்பாடு உள்நாட்டு பெறுமதி உருவாக்கத்தை பெருமளவு அதிகரிக்கும் என்பதுடன், மேலும் பல நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளையும் உருவாக்கும். உள்நாட்டு சீமெந்து உற்பத்தியினூடாக, உள்நாட்டின் ஆயிரக் கணக்கான பாரம்பரிய மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு தமது உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியாக அமைந்திருக்கும்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிகளில் டோக்கியோ சீமெந்தின் நிலையை மேலும் உறுதி செய்வதாக இந்தப் பணிகள் அமைந்திருக்கும்.

டோக்கியோ சீமெந்து குழுமத்தின் தவிசாளர் – கலாநிதி. ஹர்ஷ கப்ரால் பிசி, முகாமைத்துவ பணிப்பாளர் – எஸ்.ஆர்.ஞானம், பணிப்பாளர் சபை அங்கத்தவர்களான – ரவி டயஸ், நிறைவேற்றுப் பணிப்பாளர் – கிறிஸ்டோபர் பெர்னான்டோ ஆகியோருடன், ரதெல்ல ஹோல்டிங்ஸ் / ஹன்கோ கஸ்ட்ரக்சன்ஸ் (பிரைவட்) லிமிடெட் – நிஹால் ரதெல்ல ஆகியோர் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டனர். செயற்திட்டத்தின் ஆரம்பத்தை வண.பிதா. கென்டல் அட்கின்சன் மேற்கொண்டதுடன், டோக்கியோ ஈஸ்டர்ன் சீமெந்து கம்பனி பணிப்பாளரும், டோக்கியோ சீமெந்து தொழிற்சாலை பொது முகாமையாளருமான வி.எம். ரவீந்திரகுமார், டோக்கியோ ஈஸ்டர்ன் சீமெந்து கம்பனி வலு மற்றும் சக்தி பிரிவின் பொது முகாமையாளர் ஈ.குகப்பிரிய மற்றும் குழுமத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தஷந்த உடவத்த ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



தமிழகம்

# முதலிடத்தில் தமிழகம்

இந்தியாவில் தேசிய நல்லாட்சி தினம் கடைப் பிடிக்கப்படுவதைத் தொடர்ந்து இவ்வாண்டுக்கான நல்லாட்சி குறியீடுப் பட்டியலை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் , நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021ஆம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டை டெல்லி விஞ்ஞான் பவனில் மத்திய உட்துறை அமைச்சர் அமித்ஷா அண்மையில் வெளியிட்டார்.

இதில் நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவில் 'ஏ' குழு மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கேரளா

முதலமைச்சருக்கு

# கொலை மிரட்டல்



கேரள முதலமைச்சர் பினராய் விஜயனுக்குச் சமூக வலைத்தளத்தில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாலக்காடு மாவட்டம் எலப்புள்ளி கிராம பகுதியை சேர்ந்தவரும் பா.ஜனதா கட்சியின் தொண்டருமான ஜெயப்பிரகாஷ் என்பவரே இவ்வாறு கடந்த 2 தினங்களுக்கு முன்பு மிரட்டல் விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆபாசமாகவும் பேசியுள்ளதாக கூறப்படுகிறது. இதையறிந்த கம்யூனிஸ்டு கட்சி தொண்டர்கள், ஜெயப்பிரகாஷ் மீது வழக்குப்பதிவு செய்து கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதையொட்டி பாலக்காடு பொலிஸார் ஜெயப்பிரகாஷ் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

எனினும் இதை அறிந்த ஜெயபிரகாஷ் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கேரளா

# கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தால் பற்றியெரிந்த பொலிஸ் வாகனம்

கிறிஸ்மஸ் தினக் கொண்டாட்டத்தில் வன்முறை வெடித்த சம்பவம் கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேரளா மாநிலம் கொச்சி அருகே வெளியூரைச் சேர்ந்த 3000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதியில் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்கள் பலர் நேற்று முன்தினம் இரவு (25) கிறிஸ்மஸ் பண்டிகையை உற்சாகமாக கொண்டாடியுள்ளனர்.

இதன்போது மது போதையில் சிலர் கூச்சலிட்ட படி நடந்து கொண்டதால் அப்பகுதியைச் சேர்ந்த மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், சிறிது நேரத்தில் வாக்குவாதம் முற்றி கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் சிலர் அப்பகுதி மக்களை கற்களை வீசி தாக்கியதோடு இச்சம்பவத்தைத் தொலைபேசியில் பதிவு செய்தவர்களையும் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் அறிந்து சம்வ இடத்திற்கு வந்த பொலிஸார் மோதலில் ஈடுபட்டவர்களைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தனர்.

இதனை கேட்க மறுத்த தொழிலாளர்கள் பொலிஸாரையும் சரமாரியாக தாக்க தொடங்கியதாகவும், பொலிஸாரின் வாகனத்திற்கு தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தாக்குதலில் 4 பொலிஸார் உட்பட பலர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுடெல்லி

# ஆண்குறியை துண்டித்த பெண் வீட்டார்

சம்மதம் இல்லாமல் திருமணம் முடித்ததால் ஆத்திரம் அடைந்த மணமகள் குடும்பத்தினர், மணமகனின் ஆண் உறுப்பை துண்டித்துள்ளனர். புதுடெல்லியின் சாகர்பூர் பகுதியில்தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது.

ஆணுறுப்பை இழந்த அந்த 22 வயது இளைஞரும், பெண்ணும் 3 ஆண்டுகளாக நெருங்கிப் பழகியுள்ளனர். சில நாட்களுக்கு முன்பு அவர்களுக்கு பதிவுத் திருமணம் நடந்திருக்கிறது. இதற்கு பெண் வீட்டில் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, ரஜவ்ரி பூங்கா காவல் நிலையத்தில், திருமணம் தொடர்பான தகவல்களை அளிக்க தம்பதிகள் சென்றுள்ளனர். அவர்களுக்காக வெளியே காத்துக் கொண்டிருந்த மணமகளின் உறவினர்கள், மணமகன் வெளியே வந்தபோது, அவரைத் தூக்கிச் சென்று கொலை வெறி தாக்குதல் நடத்தினர்.

மணப்பெண்ணின் தந்தை, சகோதரர், மாமா உள்ளிட்டோர் நடத்திய தாக்குதலில், மணமகனின் உடலில் பலத்த காயம் ஏற்பட்டது. உச்சகட்டமாக, மணமகனின் ஆணுறுப்பை மணமகளின் குடும்பத்தினர் துண்டித்தனர்.

தற்போது மணமகன் புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

ஹைதராபாத்

# 100 பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்த நபர் சிக்கினார்

நபரொருவர் இன்ஸ்டாகிராம் எனும் சமூக வலைத்தளத்தினைப் பயன்படுத்தி சுமார் 100 பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் ஹைதராபாத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம் வாரங்கல் பகுதியை சேர்ந்த அஜய் என்ற 30 வயதான நபரே இச்செயலில் ஈடுபட்டு வந்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வரும் குறித்த நபர்

இன்ஸ்டாகிராம் மூலம் பெண்களுடன் பழகி வந்துள்ளதோடு

அப் பெண்களிடம் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி அவர்களை



ஏமாற்றி அவர்களது நிர்வாண படங்கள் மற்றும் குளியல் காட்சிகளைகளைப் பெற்று வந்துள்ளார்.

அத்துடன் அவர்களது அந்தரங்க வீடியோக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதனை சமூக வலைதளங்களில் வெளியிட்டு விடுவதாகவும் மிரட்டி அவர்களைப் பாலியல் வன்கொடுமை செய்துவந்துள்ளார்.

அவரது வலையில் சிறுமிகள், கல்லூரி மாணவிகள், இளம்பெண்கள், குடும்ப பெண்கள் மற்றும் அரச பெண் அதிகாரிகள் உட்பட 100க்கும் மேற்பட்ட பெண்கள் வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் அஜயிடம் சிக்கிய பெண்கள் அவமானத்திற்கு பயந்து பொலிஸாரிடம் புகார் அளிக்காததால் அவர் மேலும் மேலும் பல பெண்களிடம் அத்துமீறி உள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் ஒரு சில பெண்கள் துணிந்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததையடுத்து அஜயை கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் தெலுங்கானாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹைதராபாத்

# சிறுவர்களுக்கு கோவாக்சின்

ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் சிறார்களுக்கான தடுப்பூசி செலுத்தப்படும் என இந்தியப் பிரதமர் மோடி அறிவித்தார்.

இதனையடுத்து ஹைதராபாத்தை சேர்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் 12 வயது முதல் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கான கோவாக்சின் தடுப்பூசியை அவசர காலப் பயன்பாட்டுக்குப் பயன்படுத்த மத்திய அரசின் அனுமதியைக் கோரியிருந்தது.

இந்நிலையில் சுமார் பத்து வாரங்களுக்கு பின்னர் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பினர் பாரத் பயோடெக்




நிறுவனத்திற்கு அனுமதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த தென் ஆபிரிக்கர்'

# விருதைப் பெற்ற இந்தியர்

இந்திய வம்வசாவளியைச் சேர்ந்த இம்தியாஸ் சூலிமானுக்கு இவ் ஆண்டுக்கான சிறந்த தென் ஆபிரிக்கர்' விருது வழங்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர் மருத்துவரான இம்தியாஸ் சூலிமான் 'கிஃப்ட் ஒப் தி கிவர்ஸ்' (கொடுப்பவர்களின் பரிசு) என்ற தன்னார்வ அமைப்பைத் தொடங்கி நடத்தி வருகிறார்.

நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மற்றும் , போரால் பாதிக்கப்பட்ட 44க்கும் மேற்பட்ட நாடுகளில் நிவாரணப் பணிகள் இந்த அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா, ஆபிரிக்க நாடுகள் மட்டுமன்றி இந்தியா, பாகிஸ்தானிலும் இயற்கைப் பேரிடர்களின்போது இவ்வமைப்பு உதவி புரிந்துள்ளது.

இந்நிலையில் தென் ஆப்பிரிக்காவின் தினசரி இணையவழி நாளிதழான 'டெய்லி



மேவ்ரிக்' இம்தியாஸ் சூலிமானுக்கு 'இந்த ஆண்டுக்கான சிறந்த தென் ஆபிரிக்கர்' விருது வழங்கி கௌரவித்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் குடிமக்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதும் இம்தியாஸுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 70 சிறுவர்கள் மீது பாலியல் வன்கொடுமை

## பாதிரியாருக்கு 21 ஆண்டுகள் சிறை

ரஷ்யாவில் கடந்த 2019ஆம் ஆண்டு சிறுவர்களை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக கைது செய்யபட்ட பாதிரியாருக்கு தற்போது நீதிமன்றம் 21 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

தென் மேற்கு ரஷ்யாவில் அமைந்துள்ள யுரல் மலைத்தொடர் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று உள்ளது.

இத்தேவாலயத்தில் நிக்கோலாய் என்னும் பாதிரியார் ஒருவர் பணிபுரிந்து வந்ததோடு அவரும் அவரது மனைவியும் சேர்ந்து இதுவரை 70 சிறுவர்களை தத்தெடுத்து வளர்த்து வந்தாகவும் இதனால் அவருக்கு தேசிய அளவிலான விருது ஒன்றும் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த 2019 ஆம் ஆண்டு அவர் அச்சிறுவர்களை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால் நீதிமன்றம் அவருக்கு 21 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து



உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் அவருக்கு கொடுக்கப்பட்ட விருதையும் திரும்பப் பெறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

துருக்கி

## அசிட் வீசிய காதலனையே கரம் பிடித்த காதலி



தன் மீது ஆசிட் வீசிய முன்னாள் காதலனைப் பெண் ஒருவர் திருமணம் செய்துள்ள விநோத சம்பவம் துருக்கியில் இடம்பெற்றுள்ளது.

துருக்கியின் இஸ்கெண்டிரூன் மாவட்டத்தை சேர்ந்தவர் ஹசிம் ஒசன் செடிக். இவர் பெர்பின் ஒசிக் என்ற பெண்ணை நீண்ட காதலித்து வந்துள்ளார்.

எனினும் இருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக கடந்த 2019 ஆம் ஆண்டு இருவரும் பிரிந்துள்ளனர்.

இந்நிலையில் பிரிவை ஏற்றுக்கொள்ள முடியாமல் ஆத்திரத்தில்" எனக்கு நீ கிடைக்கவில்லை என்றால் யாருக்கும் கிடைக்க கூடாது" எனக் கூறி தனது காதலி பெர்பின் மீது ஹசிம் அசிட்டினை வீசியுள்ளாயுள்ளார்.

இதனால் அப் பெண்ணின் முகம் மற்றும் உடலின் பெரும் பகுதிகள் பாதிக்கப்பட்டன. இதனையடுத்து அந்நபருக்கு 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும் அவர் சிறையில் இருக்கும்போதும் தொடர்சியாக பெர்பின்சிடம் தன்னை மன்னித்து விடுமாறு கடிதம் எழுதி வந்துள்ளதாகவும் இதனால் நாளடைவில் இருவருக்கும் மீண்டும் காதல் மலர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இந் நிலையில் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக திறந்தவெளி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளை 2022 மே மாதம் 31 வரை பிணையில் விடுதலை செய்ய துருக்கி அரசு அனுமதி அளித்தது.

இதனையடுத்து சிறையில் இருந்து வெளியே வந்த தனது முன்னாள் காதலன் ஹசிமை பெர்பின் திருமணம் செய்துகொண்டார்.

இது குறித்து வெளியாகியுள்ள புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ்

## மிருகக் காட்சி சாலையில் இருந்து தப்பியோடிய மிருகங்கள்



மிருகக் காட்சி சாலையிலிருந்து சுமார் 9 ஓநாய்கள் பாதுகாப்பு தடுப்புகளை உடைத்துக் கொண்டு வேலியைத் தாண்டி தப்பியோடியுள்ள சம்பவம் பிரான்ஸில் இடம்பெற்றுள்ளது.

பிரான்ஸ் உள்ள *Trois Vallees* என்ற பகுதியில் அமைந்துள்ள

மிருகக் காட்சி சாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், தப்பித்துச் சென்ற ஓநாய்களில் கொடூரமாக நடந்துக்கொண்ட ஓநாயொன்றை சுட்டுக்கொன்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், பாதுகாப்புகள் பலப்படுத்தப்படும் வரை குறித்த மிருகக் காட்சி சாலைகள் முடப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

டுபாய்

## மக்கள் அதிகம் குடியேற விரும்பும் நகரம்

மக்கள் தங்களது இருப்பிடங்களை மாற்றி கொள்ள விரும்பினால் எந்த நகரத்தைத் தெரிவு செய்வார்கள் ? என்பது குறித்த ஆய்வினை பிரித்தானியாவைச் சேர்ந்த நிறுவனமொன்று அண்மையில் நடத்தியது.

இவ் ஆய்வானது சராசரி மழைப்பொழிவு, வெப்ப நிலை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு நடத்தப்பட்டது.

இந்நிலையில் இவ் ஆய்வின் முடிவில் உலகிலேயே பொதுமக்கள் அதிகம் விரும்பும் நகரமாக முதலிடத்தில் டுபாய் நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் அங்கு மழையளவு 68 மி.மீ ஆகவும், சராசரி வெப்பநிலை 28.2 பாகை செல்சியஸில் இருந்து



வருவதே ஆகும்.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகரான அபுதாபி இரண்டாவது இடமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அங்கு சராசரி மழையளவு 42 மி.மீ ஆகவும், சராசரி வெப்பநிலை 27.9 பாகை செல்சியஸ் ஆகவும் உள்ளது.

மேலும் பக்ரைன் நாட்டின் மனாமா நகர் 3ஆவது இடத்தை பிடித்துள்ளது.

தென் ஆபிரிக்கா

## மண்டேலா சிறைச் சாவி ஏலம்: தென் ஆபிரிக்கா கண்டனம்

தென் ஆபிரிக்காவில் வெள்ளை நிறவெறி ஆட்சிக்கு எதிராகப் போராடிய நெல்சன் மண்டேலா, அதற்காக 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அதில் 18 ஆண்டுகளை ராபன் தீவிலுள்ள சிறையில் அவர் கழித்தார்.

பின்னர் நிறவெறி ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, நாட்டின் முதல் கருப்பின ஜனாதிபதியாக கடந்த 1994 ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்.

தற்போது ராபன் தீவுச் சிறைச்சாலை அருங்காட்சியமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் நெல்சன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறையின் சாவியை அமெரிக்க நிறுவனமொன்று ஏலம் விடுவதற்கு தீர்மானித்துள்ளது.

எனினும் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்த தென் ஆபிரிக்க கலை மற்றும் கலாசாரத் துறை அமைச்சர் நதிம்தெத்வா "நெல்சன் மண்டேலா இருந்த சிறையின் சாவியை அமெரிக்காவைச்



சேர்ந்த கியூர்ன்சேஸ் ஆக்ஷன்ஸ் நிறுவனம் வரும் ஜனவரி 28 ஆம் திகதி ஏலத்துக்கு விடுவது கண்டனத்துக்குரியது.

தென் ஆபிரிக்காவின் வலி மிகுந்த வரலாறு, அதன் நினைவுச் சின்னங்கள் அனைத்தும் தென் ஆபிரிக்காவுக்குச் சொந்தமானவை. எங்களுடன் கலந்தாலோசிக்காமல் எங்களின் நினைவுச் சின்னமான ராபன் தீவு சிறைச் சாவி ஏலத்துக்கு விடப்படக்கூடாது. எனவே, அந்த ஏலத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

மேலும், அந்தச் சிறையின் உண்மையான சாவி எங்களிடம் உள்ளதால், ஏலத்தில் விடப்படுவது போலியாக இருக்குமா என்பது குறித்தும் விசாரித்து வருகிறோம்" என்றார் .

பிரித்தானியா

## காத்திருந்த யுவதிக்கு காத்திருந்த அதிர்ச்சி

பிரித்தானியாவைச் சேர்ந்த யுவதியொருவர் அண்மையில் வீட்டிலிருந்தவாறு பிரபல உணவகமொன்றின் உணவை ஓடர் செய்திருந்தார்.

இந்நிலையில் சிறிது நேரத்தின் பின்னர் வீட்டை அடைந்த அவ்உணவை திறந்து பார்த்த போது அதில் கோழியின் தலையொன்று முழுமையாக பொரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதனையடுத்து அவ்வுணவை புகைப்படம் எடுத்து தனது சமூக வலைத்தளப் பக்கங்களிலும் அவர் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அந்நிறுவனத்திற்கு தெரியவரவே "தாம் உணவுகளைப் புதிதாகத்



தயாரித்து தான் வழங்குவதாகவும்,கண்காணிப்பில் ஏற்பட்ட சிறிய தவறால் இவ்வாறு நடந்துள்ளதாகவும் இனி இவ்வாறு நடக்காமல் பார்த்துக்கொள்வதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த புகைப்படமானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



### இங்கிலாந்துக்கெதிரான மூன்றாவது ஆஷஸ் டெஸ்டின்

# முதல் நாளில் முன்னிலையில் அவுஸ்திரேலியா

இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா முன்னிலை பெற்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், மெல்பேணில் நேற்று ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பற் கமின்ஸ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஆரம்பத்திலேயே ஹசீம் ஹமிட்டை கமின்ஸிடம் இழந்ததோடு, ஸக் குறோலி மற்றும் டேவிட் மலானையும் குறிப்பிட்ட இடைவெளிகளில் கமின்ஸிடம் இழந்தது. பின்னர் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய அணித்தலைவர் ஜோ றூட், 50 ஓட்டங்களுடன் மிற்செல் ஸ்டார்க்கிடம் விழுந்தார்.

இதைத் தொடர்ந்து குறிப்பிட்ட நேரத்தில் கமரோன் கிறீனிடம் 25 ஓட்டங்களுடன் பென் ஸ்டோக்ஸ் வீழ்ந்ததுடன், சிறிது நேரத்திலேயே ஜொஸ் பட்லரும் நேதன் லையனிடம் வீழ்ந்தார். ஜொனி பெயார்ஸ்டோ ஓட்டங்களைப் பெற்ற நிலையில், மார்க் வூட் போலண்டிடம் வீழ்ந்தார்.

பின்னர் பெயார்ஸ்டோவும் 35 ஓட்டங்களுடன் ஸ்டார்க்கிடம் வீழ்ந்ததோடு, ஜேக் லீச், 22 ஓட்டங்களோடு ஒலி றொபின்ஸன் ஆகியோர் லையனிடம் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 185 ஓட்டங்களையே இங்கிலாந்து பெற்றது.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, டேவிட் வோணர், மார்க்கஸ் ஹரிஸ் மூலம் ஓட்டங்களைப் பெற்ற நிலையில், 38 ஓட்டங்களுடன் ஜேம்ஸ் அன்டர்சனிடம் வோர்னர் வீழ்ந்தார்.

இந்நிலையில், நேற்றைய முதல் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 61 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றுள்ளது. களத்தில், மார்க்கஸ் ஹரிஸ் 20, நேதன் லையன் ஓட்டமெதனையும் பெறாமல் உள்ளனர்.



## யுனைட்டெட் செல்லும் எமிலியானோ மார்ட்டினஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் கோல் காப்பாளரான டேவிட் டி கியாவை பிரதியிடுவதற்கான பட்டியலில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான அஸ்டன் வில்லாவின் கோல் காப்பாளர் எமிலியானோ மார்ட்டின்ஸ் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

டி கியாவுக்கு 31 வயதாகின்ற நிலையில், மார்ட்டின்ஸுக்கு 29 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

### தென்னாபிரிக்காவுக்கெதிரான

## ஓ.நா.ச. போட்டிக் குழாமில் அஷ்வின்?

தென்னாபிரிக்காவுக்கெதிரான இந்தியாவின் ஒருநாள் சர்வதேசப் ( ஓ.நா.ச.) போட்டிக் குழாமுக்கு சிரேஷ்ட சுழற்பந்துவீச்சாளர் இரவிச்சந்திரன் அஷ்வின் அழைக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு -20 உலகக் கிண்ணத் தொடரில் 35 வயதான அஷ்வின் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்தே, நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒருநாள் சர்வதேசப் போட்டி ஒன்றில் அஷ்வின் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



இதுதவிர, இந்தியாவின் உள்ளூர் 50 ஓவர்கள் போட்டித் தொடரான விஜய் ஹஸாரே தொடரில் ஓட்டங்களைக் குவித்து வரும் ருத்துராஜ் கைகவாட் மற்றும் அடிக்கடி காயமடையும் ஹர்டிக் பாண்டியாவுக்கு ஒத்துழைக்க வெங்கடேஷ் ஐயரும் குழாமில் தெரிவு செய்யப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# இந்தியா சிறப்பான ஆரம்பம்

தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டின் நேற்றைய முதல் நாள் நண்பகல் இடைவேளையின்போது முன்னிலையில் இந்தியா காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், செஞ்சூரியனில் நேற்று ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் விராட் கோலி, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார். தென்னாபிரிக்கா சார்பாக மார்கோ ஜன்சன் அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இந்தியா, நண்பகல் இடைவேளையின்போது விக்கெட் இழப்பின்றி 83 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில், மாயங்க் அகர்வால் 46, லோகேஷ் ராகுல் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.





## மிலான் செல்லும் ஸியெச்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரரான ஹக்கிம் ஸியெச்சைக் கைச்சாத்திட, ஜேர்மனி புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட், ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவுடன் இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலன் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

28 வயதான ஸியெச்சை கடந்தாண்டு செல்சி கைச்சாத்திட்டிருந்த நிலையில், 33 போட்டிகளில் விளையாடிய அவர் மூன்று கோல்களையே பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 27 டிசெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.